2. கீழ் கோடி குளத்திற்கு தண்ணீர் கொடுக்கும் திட்டம்.

II. திருவள்ளூர் தாலுக்கா—

(1) சோழவரம் வரவு கால்வாயின் குறுக்கே மாகரல் கண்டிகை எனும் கிராமத்தில் பாலம் கட்ட உத்தேசித்திருக்கும் இடம்.

(2) பிச்சாத்தூர் தாராச்சி கிராமத்திலிருக்கும் வரவு கால்வாயின் குறுக்கே பாலம் கட்ட உத்தேசித்திருக்கும் இடம்.

(3) பெரிய பாளையம் கிராமத்தில் ஆரணி ஆற்றின் குறுக்கே அணைக் கட்டு அமைக்க உத்தேசித்திருக்கும் இடம்.

III. சாலைகள்—

(1) குசஸ்தலியார் மைல் 11/4-6 அருகே வெங்கல் பாகல் மேடு அணைக்கட்டு திட்டம்.

(2) பெரியபாளையம் அருகே ஆரணியாற்றிற்கு குறுக்கே பாலம் கட்டும் திட்டம்.

(3) ஈகுவார்ப்பாளையம் பாலம் கட்டும் திட்டம்.

(4) காரணி அருகே பாலம் அமைக்கும் திட்டம்.

(இ) ஈக்வார்பாளையம் பாலம் கட்டும் திட்டம் தவிர மற்ற திட்டங்களின் மேல் அரசு ஆணை வழங்கப்படவில்லை.

(பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

திரு. கா. வேழவேந்தன் : 29-2-72 அன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெயிலில் இந்தப் பகுதிகளை எல்லாம் பார்த்ததற்காக நன்றி யறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஈகுவார் பாளையம் திட்டத்திற்கு 9 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பெரிய பாளையம் மேம்பாலம் திட்டம் போன்ற திட்டங்களை படிப்படியாக நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய தொகுதியில் இருக்கும் எல்லாத் திட்டங்களுக்கும் புள்ளி விவரத்தைக் கேட்டிருக்கிறார்கள். ஈகுவார் பாளையம் திட்டத்திற்கு அரசு அனுமதி அளித்திருக்கிறது. மற்றத் திட்டங்கள் பல்வேறு கட்டங் களில் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலிக்கப்பட்ட பிறகு படிப் படியாக நிறைவேற்ற திட்டங்கள் வகுக்கப்படும்.

மதுராந்தகத்தினருகே புறவழிச்சாலை

* 472 வினா. திரு. சி. ஆறுமுகம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1973 மார்ச் 22]

(அ) மதுராந்தகம் நகர் வழியாக செல்லும் தேசிய நெடுஞ்சாலை போக்குவரத்துக்கு நெருக்கடியாக இருப்பதால் அங்கு மாற்றுச்சாலை ஒன்று, போடும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) தேசீய நெடுஞ்சாலை எண். 45-ல் மதுராந்தகம் நகர் எல்லையில் புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு மத்திய அரசின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. இந்த வேலையின் உத்தேச மதிப்பீடு சுமார் ரூபாய் 35 லட்சம்.

திரு. கே. எ. வகாப் : இப்படி அமைக்கப்படுகிற பை-பாஸ் ரோடுகள் சில இடங்களில் விரைவாக அமைக்கப்படாமல் இருக்கின்றன. மேல் விஷாரத்திற்கு அருகே இரண்டு ஆண்டுகளாகப் போடப்படாமல் இருக்கிறது. இதிலே உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த வேலைகளைத் துரிதப்படுத்த வேண்டுமென்று தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார். அனுமதிப்பதிலேயே காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்த்து விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்று பொறியாளர்கள் ஏற்கெனவே பணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

Sea erosion in coastal areas of Killiyoor.

* 473 Q.—THIRU N. DENNIS : Will the Hon'ble the Minister for Public Works be pleased to state whether it is a fact that the sea erosion along the coastal area in Killiyoor Constituency is causing damages to living quarters ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. என். டென்னிஸ் : ஆண்டு தோறும் கடலரிப்பில் பல கிராமங்கள் பாதிக்கப்படுகின்றன. வீடுகள் நாசமடைகின்றன. அதற்குத் தீவிர நடவடிக்கை எடுத்து அடுத்த ஆண்டிலாவது இந்த மாதிரி நாசம் ஏற்படாதவாறு தடுக்க நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 351 லட்சம் ரூபாய் செலவில் அரபிக் கடலோரமாக நிரந்தரமாக தடுப்புச் சுவர் கட்டும் வேலைக்குத் தலைமைப் பொறியாளரால் திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மத்திய அரசின் ஒப்புதலுக்கும், மானிய உதவிக்கும் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தைத் தீவிரமாக அரசு பரிசீலித்து வருகிறது.